தான் இந்த ஆண்டு நிதி நிலையைப் பொறுத்த வரையிலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை; தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களைப் பொறுத்து, அவர்கள் டாக்டரேட் போன்ற உயர்பட்டங்களைப் பெற்றிருக்கிறவர்களாக இருந்தால் அவர்களுக்கு இன்ஸென்டிவ் பே கொடுக்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Grants to Sanskrit College

* 361 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Government have sanctioned any grants to the Madras Sanksrit College in Royapettah High Road, Mylapore, Madras; and

(b) if so, the details thereof for the last five years?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட முறைகளில் மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது :—

1967-68-ம் ஆண்டில் ரூ. 7,410-ம், 1968-69-ம் ஆண்டில் ரூ. 7,220-ம், 1969-70-ம் ஆண்டில் ரூ. 7,871-ம், 1970-71-ம் ஆண்டில் ரூ. 11,688-ம், 1971-72-ம் ஆண்டில் ரூ. 17,510-ம் மானியமாக அளிக்கப்பட்டது.

National Homoeopathy Institute

* 362 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start a National Homoeopathy Institute in this State with Central assistance; and

(b) if so, the details thereof?

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

THIRU N. DENNIS : May I know whether there is a proposal to start a homoeopathy college in the State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஹோமியோபதி மருத்துவ மனையோடு இணைந்த ஒரு கல்லூரியை அரசு தொடங்கவேண்டுமென்று ஒரு ஆலோசனை இருக்கிறது. அதற்காக அடையாள நிதியாக கடந்த ஆண்டு ஒரு இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், ஒரு இலட்ச ரூபாயைக் கொண்டு அது தொடங்கப்படுமானால், அதற்குப் பின்னர் பல்வேறு குறைகள் ஏற்படும் என்ற காரணத்தால், அதிக அளவில் நிதி ஒதுக்கவேண்டு மென்ற முயற்சி செய்யப்பட்டு, வருகிற ஆண்டில் ஏறத்தாழ ஆறு இலட்ச ரூபாய் ஒதுக்கி அந்தக் கல்லூரியைத் தொடங்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கும் மேலும் சில ஆலோசனைகள் நடத்தப்பட வேண்டும். அந்த ஆலோசனைகள் நடத்துவதற்கு அண்டை மாநிலத்திலிருந்து ஒரு ஹோமியோபதி கல்லூரியின் முதல்வரை அழைத்து ஆலோசனை கேட்கும்படியாக அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி : ஏற்கெனவே மதுரையில் ஹோமியோபதி மெடிகல் காலேஜ் என்று தனியார் நடத்துகிற கல்லூரிக்கு இந்தியன் ஹோமியோபதிக் கவுன்சில் அங்கீகாரம் கொடுத்திருக் கிறதா? அந்தக் கல்லூரி இன்னும் சிறந்த முறையில் வளர மத்திய அரசு நிதி உதவி கொடுக்க நம்முடைய மாநில அரசு ஏதாவது சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஹோமியோபதி கவுன்சில் தற்காலிகமாக அந்தக் கல்லூரியை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், அந்தக் கல்லூரி மேலும் வளர வேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கும் காரணத்தால் அதன் வளர்ச்சிக்கு எந்த வகையில் அரசு உதவ முடியும் என்பது பரிசிலனைக்குரியதாக இருக்கிறது.